**<u>தமிழ்நாடு அரசு</u>**

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

**வட்டாட்சியர் அலுவலகம், கயத்தார் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்**

**அறிவிக்கை**

**அறிவிக்கை எண் 02/ 2025** **நாள் 31.10.2025**

தூத்துக்குடி மாவட்டம் வருவாய் அலகில், கயத்தார் வட்டத்தில் காலியாகவுள்ள கிராம உதவியாளர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் செய்வதற்காக இவ்வலுவலக திருத்திய அறிவிக்கை எண்: 01/2025 நாள்: 12.07.2025–ன்படி விண்ணப்பங்கள் பெறப்பட்டு எழுத்து தேர்வு 06.09.2025 அன்றும் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு பணி 18.09.2025 மற்றும் 19.09.2025 அன்றும் நடைபெற்றது. இந்நேர்வில் அரசு கடித எண். (Ms).No. 636/Ser8(1)/2025 நாள் 18.09.2025 மற்றும் சென்னை கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ந.க.வ.நி.2(2)/02–28/1/2024 நாள் 22.09.2025–ன்படி கிராம உதவியாளர் பதவிக்கான உச்சபட்ச வயது வரம்பு உயர்த்தி கடிதம் வரப்பெற்றுள்ளதன் பேரில் புதிய தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. **(இவ்வலுவலக அறிவிக்கை எண் 01/2025 நாள் 12.07.2025–ன்படி ஏற்கனவே விண்ணப்பித்து எழுத்துத்தேர்வு, வாசித்தல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வருகை தந்த விண்ணப்பதாரர்கள் தற்போது விண்ணப்பிக்க தேவையில்லை. )**

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | 01.11.2025 (சனிக்கிழமை) முதல் |
| விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 15.11.2025 (சனிக்கிழமை மாலை 05.45 மணி வரை) |
| படித்தல் மற்றும் எழுதுதல் திறனறி தேர்வு நடைபெறும் நாள் | 17.12.2025 புதன்கிழமை |
| நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் | 02.01.2026 வெள்ளிக்கிழமை |
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் (ரூ.11,100 – 35,100) |
| நிரப்பப்பட உள்ள மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை | 21 |

**விண்ணப்பிக்க தகுதிகள்**

1. கல்வித்தகுதி தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் ( SSLC – Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். ( தேர்ச்சி / தோல்வி) (குறிப்பு SSLC (Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்)
2. வயது 01.07.2025 அன்று

| வ. எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1 | இதர பிரிவினர் / பொதுப்பிரிவினர் ( OC/GT) | 21 | 32 |
| 2 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் (BC/MBC/DNC) | 21 | 39 |
| 3 | அட்டவணை வகுப்பினர் / பழங்குடியினர் / ஆதரவற்ற விதவை (SC/ST) | 21 | 42 |

குறிப்பு

I. மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்ச வயது வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதல் தளர்வு வழங்கப்படும்.

II. முன்னாள் இராணுவத்தினருக்கு அதிகபட்ச வயது வரம்பு பொதுப்பிரிவினருக்கு 50 வயதும், இதர பிரிவினருக்கு 55 வயதும் வழங்கப்படும்.

III. பணியிடம் காலியாக உள்ள கிராமம் / வட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்

3. **தேர்வு முறை :**

1. மிதிவண்டி / இருசக்கர வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதும் திறன்
2. நேர்காணல்

4. நிரப்பப்படும் கிராமங்களின் விவரம் மற்றும் இனசுழற்சி விவரம்

| வ.எண். | நிரப்பப்பட உள்ள கிராமத்தின் பெயர் | சுழற்சி எண் | இனசுழற்சி விபரம் |
|---|---|---|---|
| 1 | சிதம்பரம்பட்டி | 6 | பட்டியலினத்தவர்(SC) (முன்னுரிமை பெற்றவர்) |
| 2 | வெள்ளாளங்கோட்டை | 7 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC&DNC) (பெண்) (ஆதரவற்ற விதவை) |
| 3 | கலப்பைப்பட்டி | 8 | பிற்படுத்தப்பட்டோர் (BC) (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) (பெண்) (ஆதரவற்ற விதவை) |
| 4 | தென்னம்பட்டி | 9 | பொதுப்போட்டி(GT) |
| 5 | இளவேலங்கால் | 10 | பிற்படுத்தப்பட்டோர்(BC) (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) |
| 6 | குருமலை | 11 | பொதுப்போட்டி (GT) (தமிழ்வழிபயின்றவர்) |
| 7 | தொட்டம்பட்டி | 12 | பட்டியலினத்தவர் (SC) (பெண்) (ஆதரவற்ற விதவை) |
| 8 | எஸ்.குமரெட்டியாபுரம் | 13 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC&DNC) |
| 9 | காலாங்கரைப்பட்டி | 14 | பிற்படுத்தப்பட்டோர் (BC) (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) (தமிழ்வழிபயின்றவர்) |
| 10 | திருமலாபுரம் | 15 | பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் (BCM) (முன்னுரிமை பெற்றவர்) |
| 11 | குப்பனாபுரம் | 16 | பட்டியலினத்தவர் (SC) |
| 12 | வடக்கு இலந்தைக்குளம் | 17 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC&DNC) – (தமிழ்வழிபயின்றவர்) |
| 13 | முடுக்கலாங்குளம் | 18 | பிற்படுத்தப்பட்டோர் (BC) (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) (பெண்) |
| 14 | கொத்தாளி | 19 | பொதுப்போட்டி (GT) (பெண்) |
| 15 | கொப்பம்பட்டி | 20 | பிற்படுத்தப்பட்டோர் (BC) (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) (முன்னுரிமை பெற்றவர்) |
| 16 | மேலப்பாறைப்பட்டி | 21 | பொதுப்போட்டி (GT) (முன்னுரிமை பெற்றவர்) |

| | | | |
|---|---|---|---|
| 17 | குருவிநத்தம் | 22 | பட்டியலினத்தவர் (SC) (தமிழ்வழிபயின்றவர்) |
| 18 | தெற்கு மயிலோடை | 23 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC&DNC) (பெண்) |
| 19 | கரடிகுளம் | 24 | பிற்படுத்தப்பட்டோர்(BC) (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) |
| 20 | காளாம்பட்டி | 25 | பொதுப்போட்டி(GT) (பார்வையற்றோர் மற்றும் பார்வை குறைபாடு உடையோர்) |
| 21 | அய்யனாரூத்து | 26 | பட்டியலினத்தவர் (SC) (பெண்) |

**விண்ணப்பிக்கும் முறை**

கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை தூத்துக்குடி மாவட்டத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம் https://thoothukudi.nic.in/ –ல் பதிவிறக்கம் செய்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களை பூர்த்தி செய்து 01.11.2025 முதல் 15.11.2025 மாலை 05.45 மணிக்குள் கயத்தார் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பம் செய்யலாம். நேரம் கடந்து வரும் எந்த விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது.

குறிப்பு : 1. கூடுதல் விவரங்களுக்கு https://thoothukudi.nic.in/ என்ற இணையதளத்தினை பார்வையிட்டு தெரிந்து கொள்ளவும்,

2. தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மிதிவண்டி / இருசக்கர வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் / எழுதுதல் திறனறித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியே கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

வருவாய் வட்டாட்சியர்<br>கயத்தார்

சார் ஆட்சியர்<br>கோவில்பட்டி